1987 நவம்பர் 13]

அவர்களுக்கு மேலே உள்ள அசிஸ்டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் மாற்றப்பட்டுள்ளார். இது போன்ற முறைகேடுகள் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு மிக முக்கிய காரணமாக இருந்த அசிஸ்டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் அவர்களுக்கு அந்த பாக்டரியிலிருந்து இட மாற்றம் மாத்திரம் செய்து, அந்த அதிகாரி மேல் தகுந்த நடவடிக்கை எடுக்காமல், கீழே உள்ள அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதால், அங்கே பெரிய அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளை மீண்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அசிஸ்டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் பொறுத்த அளவிலே அவருக்குப் புரமோஷன் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அவர் மேலே தகுந்த நடவடிக்கை எடுத்து, ஒரு நல்ல முறையை அரசு ஏற்படுத்துமா?

(முற்பகல் 11-00).

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே முதலிலேயே விடையிறுத்தபோது இது பற்றி சொன்னேன். எந்த முறை கேடுகளும் இல்லை. உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட லாரிகள் வெளியிலே அனுப்பப்படவில்லை என்ற குறைதான் இருந்தது என்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால், தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேக்கு, சிசு மரங்களை பொது ஏலத்தில் விடுதல்.

108—(*வினா எண் 9489—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான ஆற்றங்கரைகளில் விழுந்த தேக்கு, சிசு மரங்களை பொது ஏலத்தில் விடும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பொதுப் பணித்துறையினருக்குச் சொந்தமான ஆற்றங் கரைகளில் விழுந்த தேக்கு மரம், சிசு மரங்கள் வனத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இருப்பில் உள்ள மரங்களை ஏலமிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 18–3–87ல் நடந்த ஏலத்தில் தேக்கு கம்பங்கள் மற்றும் சிசு கம்பங்கள் மொத்தம் ரூ. 1,31,962.90-க்கு ஏலமிடப்பட்டு ஏலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

குரும்பூர் ஆதி நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருப்பணி.

109—(*வினா எண் 10668) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், குரும்பூர் ஆதி நாராயணப் பெருமாள் திருக்கோயில் திருப்பணிக்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திலிருந்து அனுமதிக்கப் பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) தொகை வழங்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், குரும்பூர் ஆதி நாராயணப்பெருமாள் திருக்கோயில் திருப் பணிக்கு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி தேவஸ் தானத்திலிருந்து ரூ. 50,000 நிதி மாற்றம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

காசங்காடு கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டிடம்.

110—(*வினா எண் 13560) திரு. பி. என். இராமச் சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, காசங்காடு கால்நடை கிளை நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?